### 100 நாள் வேலைத் திட்டத்தை

# ஒன்றிய அரசு திட்டமிட்டு முடக்குகிறது!

### மாநிலங்களவையில் சோனியா காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 19 - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க., அரசு திட்டமிட்டு முடக்கி வருவதாக காங்கிரஸ் மூத்தத் தலைவர் சோனியா காந்தி குற்றம்சாட்டி யுள்ளார்.

மாநிலங்களவையில் பேசிய சோனியாகாந்தி, முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை தற்போதைய பா.ஜ.க., அரசு வேண்டுமென்றே முடக்கி வருவதாக குற்றம்சாட்டினார்.

இத்திட்டத்துக்கு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் என்றும், புதிய விதிமுறைகளை தளர்த்த வேண்டும் என்றும் சோனியா காந்தி



வலியுறுத்தினார்.

100 நாள் வேலை திட்டத்திற்கான ஊதியத்தை 400 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்றும், வேலை நாட்களை 150 நாட்களாக உயர்த்த வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், இத்திட்டத்துக்கான நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் சோனியாகாந்தி வலியுறுத்தினார்.

### கோவை மாநகருக்கு

# தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் வழங்கப்படும்!

### சட்டப்பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினர் கேள்விக்கு – அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, மார்ச் 19 சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி எழுப்பிய கேள்விக்கு கோவை மாநகருக்கு தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் வழங்கப்படும் என்று மாநகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் தெரிவித்தார்.



கேள்வி நேரத்தின் போது சிறுவாணி அணையிலிருந்து குடிநீர் விநியோகம் குறித்து கேள்வி எழுப்பியதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதில் வருமாறு:-

கேரளாவில் இருக்கிற, சிறுவாணியில் இருக்கிற தண்ணீர் ஒவ்வொரு வருடமும் மழைக் காலத்திலே தேவையான அளவுக்கு முழு கொள்ளளவு நிரப்புவதற்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. கேட்கின்றபோது ஆழியாறிலே இருக்கின்ற பிரச்சினையைத் தீர்த்தால் தான் இங்கே தருவேன் என்று சொன்னார்கள்.

நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவரோடு தொடர்பு கொண்டு, நேரடியாக முதலமைச்சர் அவர்களுடன் பேசி அங்கு தண்ணீர் ஓரளவுக்கு நமக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கோவையைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு பில்லூர் 1,2,3, சிறுவாணி என 4 இடங்களிலுமே 380 mldக்கு மேலாக கோவை நகருக்கு தந்து கொண்டிருக்கிறோம். எனவே, ஒருசில இடங்களில் என்ன குறைபாடு என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது தெரியவில்லை.

எனவே, அதைப் பார்த்து தண்ணீரைப் பற்றி பிரச்சினையில்லை. இன்றைக்கு கோவை மாநகருக்கு ஏற்கெனவே, கொடுப்பதைவிட கூடுதலாக தண்ணீர் எல்லாம் நிறைய இருக்கிறது. இப்போதுகூட நகராட்சிகளுக்கு அதை திருப்பி அனுப்புவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது ரூ.8.9 கோடி கொடுப்பதற்கும் துறையின் செயலாளர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பணம் அனுப்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் உங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

### மதுரை வாடிப்பட்டி ஜல்லிக்கட்டுப் போட்டியில்

# உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச். 19- மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் கடந்த 16.03.2025 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியில் மாடுபிடி வீரராக பங்கேற்ற வாடிப்பட்டி வட்டம், மேலக்கால் கிராமம், உட்கடை கச்சிராயிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு.மகேஷ்பாண்டி (வயது 24) த/பெ. முத்துப்பாண்டி என்பவர் மாடு முட்டியதில் பலத்த காயமடைந்து சிகிச்சை அளிக்கப்பட்டதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த திரு.மகேஷ்பாண்டி அவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# ‘அன்னம் தரும் அமுதகரம்’-27வது நாள்!

### திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, மார்ச் 19 - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 27 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளையொட்டி நேற்று (18.3.2025) திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 1) வாழைமா நகர், ஓட்டேரி, (73வது வட்டம்). 2) கிரேக் நகர், 3வது தெரு சந்திப்பு, புளியந்தோப்பு,



சென்னை (73அ வட்டம்) ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, பி. ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெ ரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், டி. சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ். வெங்கடேசன், வி.க. வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூரில் ஆபத்தான நிலையில் உள்ள

# பழுதடைந்த அரசு வீடுகளை இடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

### பேரவையில் அ.நல்லதம்பி கேள்வி!

சென்னை, மார்ச் 19- திருப்பத்தூரில் ஆபத் தான நிலையில் உள்ள பழு தடைந்த அரசு குடியிருப்பு களில் உள்ள 99 வீடுகளை இடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பேரவையில் திருப்பத்தூர் தொகுதி உறுப்பினர் அ. நல்லதம்பி கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு: -

**அ. நல்லதம்பி:** திருப்பத்தூர். மையப் பகுதியில், அரசு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகராட்சி ஊழியர்களின் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் 99 குடியிருப்புகள், மிகவும் பழுதடைந்து, ஒரு வீடுகூட பயன்பாட்டிற்கு இல்லாத நிலையில், அரசிடம் அந்தக் கட்டடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பிரச்சினைகள் ஏற்படுவதால், வாரியத்தின்மூலம் அரசிற்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கட்டடத்தை இடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் சு. முத்துசாமி:** அரசு குடியிருப்புகள் என்பது ஏறத்தாழ 140 இடங்களிலே 140 வளாகத்தில் இருக்கிறது. அதிலே பல இடங்கள் மிக மோசமாகப் போய்விட்டது என்று உணர்ந்த காரணத்தால் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த ஆலோசனையின் படி, அதையெல்லாம் ஆய்வு செய்து, 60 இடங்களிலே இருக்கிற 60 வளாகத்தில் இருக்கிற ஏறத்தாழ 10 ஆயிரம் வீடுகள் இடிப்பதற்கான உத்தரவு போட்டு அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பல இடங்களில் இடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், உறுப்பினர் அவர்கள் இப்பொழுது சொன்னது என்ன நிலையிலே இருக்கிறது என்பதை கண்டிப்பாகப் பார்த்து, அதை இடிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், அதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும். புதிதாக இங்கே கட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இவ்வாறு விவாதம் நடந்தது.

### டாஸ்மாக்: கடைநிலை ஊழியர் தவறுக்கு அமைச்சரைப் பொறுப்பாக்க முடியுமா?

# பிரச்சினைகளைத் தேடி போராட்டம் நடத்துபவர் புதுச்சேரி மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில மதுக்கடைகளை மூட போராட்டம் நடத்துவாரா?

### பா.ஜ.க. – அண்ணாமலைக்கு, காங்கிரஸ் – கு.செல்வப்பெருந்தகை கேள்வி!

சென்னை, மார்ச் 19- அமலாக்கத்துறையின் உள்நோக்கம் கொண்ட அறிக்கையின் அடிப்படையில், டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற அண்ணாமலை உள்ளிட்ட பா.ஜ.க.வினர் கைது செய்யப்பட்டுள்ளனர். டாஸ்மாக் தலைமை அலுவலகம் அமைந்துள்ள தாளமுத்து நடராசன் மாளிகையை தடையை மீறி முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. டாஸ்மாக்கில் ரூபாய் ஆயிரம் கோடி ஊழல் என்று மார்ச் 12-ஆம் தேதி ஊடகங்களின் மூலமாக அண்ணாமலை குற்றம் சாட்டினார்.



அடுத்த நாள் 13-ஆம் தேதி அமலாக்கத்துறை டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என்று அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் எந்த அடிப்படையில் ஊழல் நடைபெற்றது என்பது பற்றி எந்த விவரமும் இல்லை. அந்த வழக்கு விவரங்கள் என்ன ? எந்த ஆண்டுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டன என்ற விவரத்தை அறிவிக்காமலேயே டாஸ்மாக்கில் பணியாற்றுகிற கடைநிலை ஊழியர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் அமலாக்கத் துறை இந்த குற்றச்சாட்டை கட்டமைத்துள்ளது. டாஸ்மாக்கில் பணியாற்றுகிற கடைநிலை ஊழியர் செய்கிற தவறுக்கு அத்துறையின் அமைச்சரை எப்படி பொறுப்பாக்க முடியும் ?

#### அங்கிட் திவாரி செய்த குற்றம்!

கடந்த டிசம்பர் 2023-இல் மதுரை அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரி திண்டுக்கல் டாக்டரிடம் முதல் தவணையாக ரூபாய் 20 லட்சம் லஞ்சமாக பெற்று கையும் களவுமாக பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அமலாக்கத்துறை அதிகாரி செய்த குற்றத்திற்கு அத்துறையின் அமைச்சரான நிர்மலா சீதாராமன் பொறுப்பேற்றாரா ? ஊருக்கு உபதேசம் செய்யும் அண்ணாமலை இதற்கு பதில் கூறுவாரா ? எனவே, இதுவொரு அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையாகும். ஏற்கனவே அமலாக்கத்துறையின் அவதூறு குற்றச்சாட்டின் பேரில் 15 மாதங்கள் சிறையில் இருந்து, உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு, வெளியே வந்திருக்கிற அமைச்சர் செந்தில் பாலாஜி மீது, மீண்டும் குறிவைத்து கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பேன் என்று தனது நிலையை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தேசிய அளவில் பா.ஜ.க., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகியவற்றோடு கூட்டணி வைத்துக் கொண்டு மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்து அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதுவரை பா.ஜ.க. ஆட்சியில் 10 ஆண்டுகளில் அமலாக்கத்துறை பதிவு செய்த 97 சதவிகித வழக்குகளில் 2 சதவிகிதம் தான் தண்டனை பெறப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கும் நோக்கத்தில் தான் அமலாக்கத்துறை செயல்படுகிறதே தவிர, குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதில் படுதோல்வி அடைந்திருக்கிறது. இதை எதிர்த்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்கட்சிகள் தொடுத்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், டாஸ்மாக் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்த பா.ஜ.க.வுக்கு காவல் துறையினர் அனுமதி அளிக்கவில்லை. குறிப்பாக, சென்னையில் போராட்டம் நடத்த வேண்டுமென்றால், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம், வள்ளுவர் கோட்டம் என சில குறிப்பிட்ட இடங்களில் தான் அனுமதி வழங்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியினர் நடத்தும் ஊர்வலங்களுக்கு கூட சில நேரங்களில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. தடையை மீறி போராட்டம் நடத்தி கைது செய்யப்பட்ட சூழலில் அண்ணாமலை, ஊடகங்களில் பேசும் போது, இனிமேல் காவல்துறையினருக்கு அனுமதிக் கடிதம் அளிக்க மாட்டோம், பா.ஜ.க.வுக்கு மரியாதை அளிக்காத காவல்துறையினரை தூங்க விடமாட்டோம் என்று மிரட்டியதோடு, டாஸ்மாக் கடைகளில் பூட்டு போடும் போராட்டம் நடத்தப்படும் என்று அண்ணாமலை அறிவித்திருக்கிறார். பிரச்சினைகளை தேடி அதற்காக போராட்டம் நடத்த முற்படுகிற அண்ணாமலை புதுச்சேரி உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள மதுபானக் கடைகளை மூட போராட்டம் நடத்துவாரா ?

#### அமலாக்கத்துறையின் அடக்கு முறைகள்!

அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் தமிழ்நாட்டில் அமலாக்கத்துறையை தூண்டிவிட்டு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஆற்றல்மிக்க அமைச்சர் செந்தில் பாலாஜியை முடக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இத்தகைய அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகிறது. இதை எதிர்கொள்கிற பேராற்றலும், துணிவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை, இந்தியா கூட்டணி 2019 மக்களவை தேர்தலில் இருந்து கட்டுக்கோப்புடன் கொள்கை உறுதியோடு செயல்பட்டு அனைத்து தேர்தல்களிலும் மக்கள் ஆதரவோடு வெற்றி பெற்று வருகிறது. இந்நிலையில் பா.ஜ.க.வுடன் சேருவதற்கு தமிழகத்தில் எந்த கட்சியும் முன்வராத நிலையில் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு நாள்தோறும் அண்ணாமலை அவதூறு குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார்.

#### அநாகரிகமான அண்ணாமலை!

தமிழக வெற்றி கழகத்தை பா.ஜ.க. பக்கம் ஈர்ப்பதற்கு அதன் தலைவர் விஜய்க்கு ஒய் பிரிவு பாதுகாப்பு அமித்ஷாவின் பரிந்துரையின் பேரில் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டின் களநிலவரத்தை அறிந்த விஜய், நேற்று பா.ஜ.க.வின் டாஸ்மாக் போராட்டத்தை கடுமையான முறையில், மிகமிகத் தரம் தாழ்ந்து இழிவாக விமர்சனம் செய்திருக்கிறார். இதன் மூலம் தமிழ்நாட்டில் அரசியல் அநாகரீகமாக அண்ணாமலை மாறி வருகிறார்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஒன்றிய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் 2005 இல் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்திற்கான ரூபாய் 2118 கோடி நிதி தராமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகிறது என தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டினார். இதுகுறித்து பலமுறை கடிதம் எழுதினார். இதனால், கடந்த நவம்பர் மாதத்திலிருந்து ஐந்து மாதங்களாக 100 நாள் வேலை திட்டத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் தர முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியில் கடுகளவாவது அக்கறை இருந்தால், ஒன்றிய அரசிடம் பேசி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை பெற்றுத் தர அண்ணாமலை முயற்சி செய்வாரா ?

தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு 201617 இல் 3.41 சதவிகிதமாக இருந்தது, 2024-25 இல் நிதி ஒதுக்கீடு 1.96 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவிகிதத்தையும், மொத்த மக்கள் தொகையில் 6 சதவிகிதத்தையும் பெற்றிருக்கிற தமிழ்நாடு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 9.21 சதவிகிதப் பங்கை அளிக்கிறது. ஆனால், தமிழகத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வரிகளின் மூலமாக வழங்குகிற பங்கு வெறும் 4 சதவிகிதம் தான்.

தமிழ்நாடு விரோத போக்கு காரணமாக பா.ஜ.க. காலூன்ற முடியாத நிலையில் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும், தமிழக அரசின் மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் மூலம் மக்களின் பேராதரவை பெற்று வருவதால், அதை சகித்துக்கொள்ள முடியாத அண்ணாமலை, அரசியல் விரோத உணர்ச்சிகளின் காரணமாக அடிக்கடிப் போராட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார். போராட்டங்களை தேடி அலைந்து, அதை நடத்தி, ஊடகங்களின் விளம்பர வெளிச்சத்தை அண்ணாமலை பெறலாமே தவிர, தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை என்றுமே பெற முடியாது.

இவ்வாறு செல்வப்பெருந்தகை அறிக்கையில் கூறியுள்ளார்.




சென்னை தெற்கு மாவட்டம்,மதுரவாயல் வடக்கு பகுதி,145 வது வட்ட செயலாளர் நெற்குன்றம் ப.ஆலன் தலைமையில் பகுதி அவைத்தலைவர் ஆர்.கர்னல் முன்னிலையில் நெற்குன்றம் 145 வது வட்டத்தில் மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மகளிர் அணி நிர்வாகிகள் கேக் வெட்டி கொண்டாடினர். வட்ட கழக நிர்வாகிகள் பொது மக்கள் அனைவரும் இதில் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ.வி.தட்சிணாமூர்த்தி

### மார்ச் 19 (2012)



நான்கு முறை ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட 7வது வார்டு கிளைக் கழகச் செயலாளராகவும், இரண்டுமுறை வடசென்னை மாவட்டக் கழக பொருளாளராகவும், அதன்பின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலக் குழு தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

சென்னை குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண சென்னை மாவட்டக் கழகம் நடத்திய சாலை மறியலில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு தரக்கோரி நடத்திய அறப்போராட்டம், இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய அறப்போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**